25.11.2025



**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.**

**அசல் வழக்கு எண்.182/2023**

**வா.சா.3–ராஜாத்தி, க/பெ.சந்திரசேகரன்**

**சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்த முதன்மை நிரூபண வாக்குமூலத்தில் சி.ராஜாத்தி என்று தான் கையொப்பம் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்த முதன்மை நிரூபண வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தது போன்று தான் எப்போதும் கையொப்பம் செய்வேன். 19.08.1991ம் ஆண்டு சர்வே எண்.198/9 என்ற நிலத்தை நான் கிரையம் வாங்கும் போது வா.சா.ஆ.9 அந்த கிரையாவணத்தில் சந்திரா என கையொப்பம் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.9 கிரையாவணப்படி கிரையம் பெற்ற சொத்தை அளந்து பார்த்தீர்களா என்றால் என் கணவர் சொத்தை அளந்து பார்த்தாரா என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.9 கிரையாவணத்தில் கிரையம் பெற்ற சொத்தின் நான்கெல்லையில் வண்டிப்பாதைக்கு வடக்கு என கண்டுள்ளது என்று சொன்னால் சரிதான், அந்த வண்டிப்பாதை எந்த சர்வே எண் எனக்கு தெரியாது.

25.11.2025



வா.சா.ஆ.9 ஆவணத்தில் வண்டிப்பாதையின் சர்வே எண் குறிப்பிட்டு எழுதவில்லை என்று சொன்னால் எனக்கு படிக்க தெரியாது, என் கணவருக்கு தான் தெரியும். வா.சா.ஆ.9 ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள வண்டிப்பாதை எந்த சர்வே எண்ணில் செல்கிறது என்று கேட்டு தெரிந்து கொண்டீர்களா என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.9 ஆவணத்தில் தென்வடல் வண்டிப்பாதை எந்த சர்வே எண்ணில் செல்கின்றது என ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.

15.07.1994 ம் தேதி நான் பிரதிவாதி மகேஷ்வரனின் பெற்றோர்கள் சுப்பிரமணி செல்லம்மாள் ஆகியோருக்கு எழுதிக்கொடுத்த கிரையாவணத்தில் நான்கெல்லை விவரத்தில் வண்டிப்பாதைக்கு வடக்கு என குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். நான் பிரதிவாதி பெற்றோர்களுக்கு எழுதிக்கொடுத்த கிரையாவணத்தில் சர்வே எண். 198/11, 198/14, 198/15, 198/16 ஆகியவை சர்வே எண்கள் மேற்கொண்டு எ மற்றும் பி என உட்பிரிவு செய்யப்பட்டதாக அந்த ஆவணத்தில் நான் எழுதிக்கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

என்னுடைய கொளுந்தனார் பெயர் நடராஜன் என்று சொன்னால் சரிதான். சர்வே எண்.198/14 சி-ல் என்னுடைய கொளுந்தனார் நடராஜன் சட்டவிரோதமாக

25.11.2025



பைப்லைன் அமைத்ததால் பிரதிவாதி குடும்பத்திற்கும், நடராஜனுக்கும் தகராறு ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். தாவா சர்வே எண்.198/14 சி–என்ற நிலத்தில் என்னுடைய கொளுந்தனார் பைப்லைன்அமைத்தது சம்மந்தமாக சமூக நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 54/2002 வழக்கு நடைபெற்றது தெரியுமா என்றால் தெரியாது. வாதியின் நிலத்தின் வடபுறத்திலும், பிரதிவாதி நிலத்திற்கு தென்புறத்திலும் இடையே வாரி செல்கிறதா என்றால் சரிதான். இந்த வாரியின் ஆழம் மற்றும் அகலம் எனக்கு தெரியாது. தற்போது அந்த வாரி மூடியுள்ளது. வாதி சொல்லிக்கொடுத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல, நான் என்னுடைய பெயரை சந்திரா என்றும், ராஜாத்தி என்று மாற்றி கையொப்பம் செய்தது போன்று, நான் சொல்வது போன்று இல்லாத வாரியை இருப்பதாக பொய் சொல்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போன்று கிழமேல் வாரியின் சர்வே எண் எனக்கு தெரியாது.

/உண்மை நகல்/
ஒம்/–திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.